

அரியலூர் மாவட்ட கழக அலுவலகத்தில், வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் ஜெயங்கொண்டம் தொகுதியின் வெற்றி வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் க.சொ.க. கண்ணன், அரியலூர் தொகுதியின் வெற்றி வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் லதா பாலு, குன்னம் தொகுதியின் வெற்றி வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் கழக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர் சபாபதி மோகன், மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன்,நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன்,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் உடனிருந்தனர்.

### திருமயம் தொகுதியில் மாணவ - மாணவியருக்கு கல்வி உதவித்தொகை!

# ஆண்டிற்கு ரூ.1 கோடி அறக்கட்டளை மூலமாக வழங்கப்படும்!

## செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!

புதுக்கோட்டை, ஏப். 6 -

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் திருமயம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் அறிமுக மற்றும் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். திருமயம் தெற்கு ஒன்றியச் செயலாளர் அழகு சிதம்பரம் வரவேற்புரையாற்றினார். இந்தக் கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், திருமயம் தொகுதி திமுக வேட்பாளரும் இயற்கை வளங்கள் துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:



திருமயம் சட்டமன்ற தொகுதியில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகிற நான் திருமயம் தொகுதியில் தேர்தல் பணியை தொடங்குகிறோம். கழகத் தலைவர் தளபதி அவர்கள் எனக்கு சட்டத்துறை அமைச்சராகவும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் ஆகவும் பணியாற்றுகின்ற வாய்ப்புகள் தந்தார்கள். இத்தனை வாய்ப்புகள் எனக்கு கிடைத்ததற்கு காரணம் திருமயம் தொகுதி மக்கள் தான் என்பதை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன். ஒரு தொகுதியை ஒருவன் எப்படி நேசிக்கிறானோ அவன் தான் அந்த தொகுதியில் அக்கறை உள்ளவனாக இருப்பான். திருமயம் தொகுதி 1952 இல் இருந்து 15 சட்டமன்ற தொகுதிகளை சந்தித்து இருக்கிறது. 14 சட்டமன்ற தொகுதிகளில் இல்லாத மாற்றங்களை, வளர்ச்சிகளை கொண்டு வந்திருக்கிறேன் என்பதை மனுசாட்சி உள்ள எவரும் மறுக்க முடியாது. திருமயம் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான திருமயம்

பேரூராட்சி தரம் உயர்த்தப்பட்டது. திருமயம் தெற்கு மின் மயானம் அமைத்து தரப்பட்டது. திருமயம் மக்கள் கனவில் கூட நினைத்து பார்க்க முடியாத கலைக்கல்லூரியை நிறைவேற்றி தந்தவர் தமிழக முதல்வர்.

திராவிட மாடல் என்பது எல்லோருக்கும் எல்லாம் என்பதுதான். பெண்கள் நாற்காலியில் அமர்கின்ற உரிமையை பெற்று தந்தது திராவிட மாடல் அரசு. இந்தியா முழுவதும் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை உண்டு என்று சட்டம் கொண்டு வந்து டாக்டர் அம்பேத்கர் அவர்களின் கனவை 1989 ஆம் ஆண்டு கலைஞர் கொண்டு வந்த பெண்களுக்கு சம உரிமை சட்டம் தான் இந்தியாவிற்க்கே வழிகாட்டியாக இருந்தது. திருமயம் தொகுதியில் வேலைவாய்ப்புகளை தருகிற வகையில் தொழிற்சாலை உருவாகும் என்றால் அதற்கு அரசு மானியத்தை பெற்று தருவதோடு, கூடுதலாக 5 கோடி ரூபாயை எங்களுடைய கல்வி அறக்கட்டளை மூலமாக வழங்கப்படும். திருமயம் தொகுதியில் ஏழை மாணவ, மாணவியர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 25 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை ஆண்டிற்க்கு ஒரு கோடி ரூபாய் வரை எனது அறக்கட்டளை மூலம் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்

அரிமளம், திருமயம், பொன்னமராவதி மூன்று இடங்களில் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து மூன்று முதியோர் விடுதிகள் கட்டி தரப்படும்...

துளையானூரில் மகளிர் கல்லூரி விடுதி அமைத்து தரப்படும். பொன்னமராவதி, அரிமளம், காரையூர் பகுதிகளில் 3 மாணவிகள் விடுதி கட்டித் தரப்படும்.

இந்தியாவிலேயே சிறந்த ஆட்சியை முதலமைச்சர் தளபதி அவர்கள் வழங்கி கொண்டிருக்கிறார். கடந்த தேர்தலைப் போன்று இல்லாமல் இந்த தேர்தலில் கூட்டணி பலமும் இருக்கிறது மக்கள் பலமும் இருக்கிறது. வேறு எந்த கூட்டத்தாலும் இந்த கூட்டத்தை வெல்ல முடியாது மிஞ்ச முடியாது.

நாங்கள் எதுவும் செய்யாமல் மக்களை சந்திக்கவில்லை இந்தியாவிலேயே இல்லாத புதுமாதிரியான திட்டங்களை தந்து விட்டு தான் மக்களை சந்திக்கிறோம்.

எல்லோருக்கும் சமமானது தான் திராவிட மாடல், அதை புரிந்து கொண்டவர்கள் வரவேற்கிறார்கள். இது ஆன்மீகத்தைப் பற்றிய விஷயமே கிடையாது. இந்துத்துவா வேறு ஆன்மீக அரசியல் என்பது வேறு, இந்தியாவிலேயே நான்காயிரம் கோவிலுக்கு குடமுழுக்கு செய்திருக்கிற ஒரே அரசு திராவிட மாடல் அரசு. அடுத்து அமைகிற ஆட்சியில் 2000 என அறிவித்து அதையும் நிறைவேற்றிக் காட்டுவோம். எனவே 2.0 ஆட்சி தொடர உதய சூரியன் தினத்திற்கு வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

நிகழ்வில் மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் எஸ்.ஆர். அண்ணாமலை ரகுபதி, திருமயம் தொகுதி பொறுப்பாளர் மதுரை முத்தக் குமார், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் இராம.சுப்புராம், காங்கிரஸ் தெற்கு மாவட்ட தலைவர் மணிகண்டன், விசிக சார்பில் வெள்ளை நெஞ்சன், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், திமுக சார்பில் முன்னாள் ஒன்றியச் செயலாளர்கள் ஆர். எம்.கருப்பையா, சி.த.ஆவுடையப்பன், எம்.பி.சரவணன், அணி அமைப்பாளர்கள் இரா.மேகநாதன், தேவி, கே.ஆர்.ராமசாமி மற்றும் அருண் சேகர், சுப. துரைராஜா, ஆக்காட்டி ஆறுமுகம், முல்லை ரமேஷ், அண்ணாத்துரை, ஜான் பீட்டர், சிக்கந்தர், மங்களராமன் பேரையூர் பாலு, மற்றும் மதச்சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். முடிவில் திருமயம் வடக்கு ஒன்றியச் செயலாளர் இரா.கணேசன் நன்றி கூறினார்.



2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு கழக மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### நானும், முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவும் கிறிஸ்தவர்கள் நடத்தும் ஒரே பள்ளியில்தான் படித்தோம்!

# கலைஞர் கொடுத்த டி.வி. இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது!

## மணப்பாறை சட்டமன்றத் தொகுதி தேர்தல் பரப்புரையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

கரூர், ஏப்.6 -

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் மணப்பாறை சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் மனித நேய மக்கள் கட்சியின் வேட்பாளர் அப்துல் சமத்தை ஆதரித்து, திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, மணப்பாறை பேருந்து நிலையம் அருகே தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.



தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி.; உச்சி சூரியனினும் உதய சூரியனுக்காக நீங்கள் காட்டும் ஆர்வத்தைப் பார்க்கும்போது, வெற்றி என்பது உறுதி செய்யப்பட்ட ஒன்று என்பதை எந்த சந்தேகமும் இல்லாமல் தெரிகிறது. நம்முடைய வேட்பாளர் மனிதநேய மக்கள் கட்சியின் வேட்பாளர் அப்துல் சமத் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

எல்லோராலும் நேசிக்கப்படக்கூடிய ஒரு வேட்பாளர். எல்லோரிடமும் அன்பாகப் பழகக்கூடிய, எந்தவித வேற்றுமையும் இல்லாமல் அன்போடு நடந்து கொள்ளக் கூடியவர். மறுபடியும் மக்கள் பணியை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பை, நீங்கள் அவருக்கு உருவாக்கித் தர வேண்டும்.

தொடர்ந்து இந்த பகுதியில் உள்ள மக்களுக்குப் பல்வேறு பணிகளை செய்துள்ளார். தொகுதி அளவில் அனைத்து ஊராட்சிகள், ஒன்றியங்கள், நகரங்கள் மற்றும் குக்கிரா மங்களுக்கு நேரடியாக சென்று களப்பணிகளை செய்து வருகிறார். மணப்பாறை சட்டமன்றத் தொகுதியின் நீண்ட வருட கோரிக்கையான அரசு கல்லூரி அப்துல் சமது அவர்களின் தீவிர முயற்சியின் காரணமாக கொண்டுவரப்பட்டது.

புத்தாநத்தம் முதல் துவரங்குறிச்சி வரையிலான தேசிய நான்கு வழிச்சாலை நீண்ட வருட கோரிக்கையாக இருந்தது, அதையும் நிறைவேற்றிக் கொடுத்துள்ளார். தொகுதி அளவில் பல்வேறு பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் அமைத்துக் கொடுத்துள்ளார்.

நம் திமுக தலைவர் செயல்படுத்திய திட்டங்களை அனைத்தையும் மக்கள் மத்தியில் சிறப்பாக கொண்டு சேர்த்துள்ளார். திமுக நிர்வாகிகளோடு இணக்கமாகவே செயல்பட்டு வருகிறார். தொகுதி சார்ந்த முன்னெடுப்புகள் மற்றும் செயல்முறைகள் அனைத்தையும் கழக நிர்வாகிகளோடு ஆலோசித்து, இணைந்து செயலாற்றி வருகிறார்.

நமது கூட்டணி என்பது கொள்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கூட்டணி, எதிரணியில் உருவாகியுள்ள கூட்டணி என்பது சந்தர்ப்பவாத கூட்டணி. குடியுரிமை திருத்த சட்டம், முத்தலாக், வேளாண் திருத்தச் சட்டம் , ஹிந்தி திணிப்பு, கீழடியுடைய ஆய்வறிக்கையை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொன்னதாக இருக்கட்டும் நிதி பகிர்வு உள்ளிட்டவை ஆதரவளித்தவர் எடப்பாடி பழனிசாமி. தமிழ்நாட்டைப் பற்றி அக்கறை இல்லாத கூட்டணி. தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து துரோகம் செய்து கொண்டிருக்கக்கூடிய கூட்டணி.

பாஜக ஒரு பெரிய “வாஷிங் மெஷின்” வைத்துள்ளது. யார் மீது எந்த வழக்கு இருந்தாலும், பாஜக கூட்டணியில் இணைந்தவுடன் அவர்கள்மீது உள்ள அனைத்து வழக்குகளும் கைவிடப்படுகின்றன. IT, CBI, ED போன்ற அமைப்புகளை டெல்லியில் “ICE” என்று கூறுவார்கள்.

இது தமிழ்நாட்டுக்கும் நாக்பூருக்கும் இடையிலான போர். ஒரு விதத்தில் பார்த்தால், இது கீழடியும் நாக்பூரும் இடையிலான போர் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் எல்லோரும் ஒன்றாக இணைந்து நல்ல எதிர்காலத்திற்காக வாழ வேண்டும். இது ஆர்எஸ்எஸ் அமைப்பின் கலாச்சாரத்துக்கும், அதன் அரசியலுக்கும் எதிராக நடைபெறும் ஒரு போராட்டம் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறை சட்டம் என்றால் என்ன? வெளிநாடுகளிலிருந்து இந்தியாவில் செயல்படும், மக்களுக்கு சேவை செய்யக்கூடிய என்.ஜி.ஓ.க்கள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு நிதி வழங்கப்படும். அந்த நிதியின் மூலம் அவர்கள் பள்ளிக்கூடங்கள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை மேற்கொள்கிறார்கள்.

பெற்றோர் இல்லாத குழந்தைகள் சேர்ந்து படித்து வாழ்வதற்காக விடுதிகள் அமைக்கப்படுகின்றன. நானும் அப்படிப்பட்ட ஒரு கிறிஸ்தவ கல்வி நிறுவனத்தில் படித்திருக்கிறேன். சென்னை சர்ச் பார்க் பகுதியில் உள்ள, கிறிஸ்தவர்கள் நடத்தும் ஒரு பள்ளிதான் அது. அதே பள்ளியில்தான் முன்னாள் முதல்வர் அம்மையார் ஜெயலலிதா அவர்களும் படித்தார்கள்.

நான் மட்டும் அங்கே படித்தேன்” என்று சொல்லி அதற்கான ஒரு கதையையும் கூறுவார்கள். ஆனால், எனக்கு முன்னரே அங்கே படித்தவர் ஜெயலலிதா அவர்கள். இவ்வாறு வெளிநாட்டு நிதியை பெற்று, இங்கு மக்களுக்கு பயன்படும் வகையில் பல்வேறு சேவைகள் வழங்கப்படுகின்றன. முதியவர்களுக் கான சேவை மையங்கள் உள்ளிட்ட பல அமைப்புகள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

இந்தச் சூழலில், இத்தகைய சேவைகளை கட்டுப்படுத்தவும், குறிப்பாக இஸ்லாமியர், கிறிஸ்தவர் போன்ற சமூகங்களின் அமைப்புகளையும், அரசின் கொள்கைகளை எதிர்த்து கேள்வி எழுப்பும் நிறுவனங்களையும் கட்டு ப்படுத்தும் நோக்கில், வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறை சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அந்த என்.ஜி.ஓ.வை ஏன் மூட வேண்டும்? அவர்களுக்கு வந்த நிதியை நாங்களே எடுத்துக்கொள்வோம்; வேண்டுமானால், உங்களுக்கு வழங்கப்பட்ட அந்த உரிமையையும் பறித்துக்கொள்ளலாம் என்ற மனநிலையுடன், காரணம் கூறத் தேவையில்லாத ஒரு ஒடுக்குமுறை சட்டத்தை கொண்டு வருகின்றனர். நம்முடைய முதலமைச்சர் அதற்கு எதிராக கேள்வி எழுப்புகிறார். ஆனால் எடப்பாடி பழனிசாமி, இதற்கு எதிராக ஒரு முணு முணுப்பையும் வெளிப்படுத்தவில்லை.

முதலமைச்சர் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகையாக வழங்குவோம் என்று சொன்னபோது, அதை வழங்க முடியாது, யாராலும் வழங்க முடியாது என்று கூறினார்கள். ஆனால் இன்று, முதலமைச்சர் இரண்டாயிரம் ரூபாய் வழங்குவோம் என்று கூறியவுடன், “நானும் இரண்டாயிரம் ரூபாய் வழங்குவேன்” என்று கூறுகின்றனர்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை கொண்டு வந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதே விவசாயி களுக்காக, இன்று எந்தவித மின்மீட்டரும் பொருத்தப்படாத புதிய பம்பு செட்டுகளை, 20 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவோம் என்று நம்முடைய முதலமைச்சர் அறிவித்துள்ளார். இது தான் திராவிட மாடல் ஆட்சி.

“Choice is yours” என்று கூறி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எட்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள கூப்பனை வழங்குவோம் என்று தெரிவித்துள்ளார். அந்த கூப்பனை பயன்படுத்தி, நீங்கள் விரும்பிய எந்தப் பொருளையும் வாங்கிக் கொள்ளலாம். வீட்டில் டிவி இருக்கிறதா? அதை மாற்றி இன்னும் பெரிய டிவி வாங்க வேண்டுமா? பழைய டிவியை கொடுத்து, இந்த 8000 ரூபாய் கூப்பனை பயன்படுத்தி புதிய டிவி வாங்கிக் கொள்ளலாம். அதனால், 8,0000 ரூபாய் கூப்பனை பயன்படுத்தி, உங்களுக்கு தேவையானதை நீங்கள் தேர்ந்தெடுத்து வாங்கிக் கொள்ளலாம்.

தலைவர் கலைஞர் அவர்கள் எப்படி “தொலைக்காட்சி பெட்டி வழங்குவேன்” என்று கூறி அதை நிறைவேற்றினாரோ, அது போல அவர் வழங்கிய வண்ணத் தொலைக்காட்சிகள் இன்று வரை பயன்பாட்டில் உள்ளன.

நாம் வாங்கும் டிவிகள் இரண்டு ஆண்டுகளிலேயே செயலிழந்து விடுகின்றன; ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிய தொலைக்காட்சி இன்றும் இயங்கி கொண்டிருக்கிறது.

கலைஞரின் வாரிசாக, கலைஞரைப் போல சொன்னதைச் செய்து காட்டும் முதலமைச்சர். நமது திராவிட மாடல் 2.0 ஆட்சியில் அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணியில் உள்ள மனித நேய மக்கள் கட்சியின் வேட்பாளர் அப்துல் சமத் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன் என்று பேசினார்.

## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தொகுதிப் பார்வையாளர்கள் நியமனம்!

### (ஐந்தாவது பட்டியல்)

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் முதற்கட்டமாக கீழ்கண்டவாறு சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| சட்டமன்றத் தொகுதி | | பார்வையாளர் |
|---|---|---|
| போடிநாயக்கனூர் | - | பெ.குழந்தைவேலு |
| இராயபுரம் | - | கலாநிதி வீராசாமி |
| திருப்பூர் தெற்கு | - | மாலதி நாகராஜ் |
| விழுப்புரம் | - | வழக்கறிஞர் கண்ணப்பன் |
| வானூர் | - | இரா.வெங்கடேசன் |

குறிப்பு : ஏற்கனவே தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 04.04.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் களம் காணும் நமது மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் மருத்துவர் வை.முத்துராஜா புதுக்கோட்டை பெரிய பள்ளிவாசலில் ஜும்மா தொழுகை முடிந்து வரும் இஸ்லாமிய தோழர்கள் சகோதரர்களிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் புதுக்கோட்டை வடக்கு மாநகர பொறுப்பாளர் எம்.லியாகத் அலி , புதுக்கோட்டை தெற்கு மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஷ், மேனாள் நகர்மன்ற துணை தலைவர் க.நைனா முகம்மது, சாத்தையா, சுப.சரவணன், கார்திகேயன் வேலுச்சாமி, அப்புக்காளை, ராஜா முகமது ரபீக், ஆசிப், அறிவுடைநம்பி, அப்பாஸ் அலி, ரமேஷ் ஆலயம் பாரதி மற்றும் கழக தோழர்கள் நிர்வாகிகள் கலந்துகொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.